Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 18, 2023

திங்கட்கிழமை டிசெம்பர் 18, 2023 | ஒளி: 09 கதிர் 151 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## ஆபத்து



தரமற்ற பாடசாலை உபகரணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் சிறுவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதாக கொழும்பு-ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் நிலைமை கட்டுப்பாட்டு பிரிவின் தலைவர் டாக்டர் மஹிந்த விக்கிரமாராச்சி

தொடர்ச்சி P2



## "தனக்குத் தெரியாது"

அரசியலில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கட்சியும் மாநாடுகளை நடத்த வேண்டும் என்றும், அதன் மூலம் கட்சியின் பலத்தை காட்ட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2






### சுதந்திர மக்கள் காங்கிரஸ்

# பிளந்தது

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெருமவின் தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர், அந்த காங்கிரஸில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளனர் என தகவல்கள் கசிந்துள்ளன. அவ்வாறு வெளியேறவுள்ள உறுப்பினர்கள் நால்வர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளனர் என்றும் அந்த தகவலறிந்த வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

## பிறப்பு சதவீதம் குறைந்தது

கடந்த 10 வருடங்களில் இலங்கையில் பிறப்பு எண்ணிக்கை கிட்டத்தட்ட 25 சதவீதத்தால் குறைந்துள்ளதாக சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள பிறப்புப் பதிவேட்டின் மூலம் தெளிவாகின்றது.



தொடர்ச்சி P2



## "நான் 24 நிமிடங்கள் இறந்தேன்"

இறந்து 24 நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் உயிர் பெற்ற ஒரு பெண் பற்றி விபரம் அமெரிக்காவில் இருந்து தெரிவிக்கப்பட்டது.

Lauren Canaday என்ற பெண் மாரடைப்பு காரணமாக மருத்துவ ரீதியாக இறந்தார்.எனினும், 24 நிமிடங்களுக்குப் பின்னர் அப்பெண் உயிர்த்தெழுந்தார்.

தொடர்ச்சி P2



## வாளுடன் இளைஞன் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில், மோதல் சம்பவம் ஒன்றுக்கு தயாரான நிலையில் இருந்த வாள் வெட்டு கும்பலைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் வாளுடன், சாவகச்சேரி பொலிஸாரினால் சனிக்கிழமை (16) கைது செய்யப்பட்டுள்ளார். இவர், பருத்தித்துறை பகுதியை சேர்ந்த 21 வயதானவர் என இனங்காணப்பட்டுள்ளார்.


தொடர்ச்சி P2

## "காக்கைகள், மைனாக்கள் பறக்க முயல்கின்றன"



15 சதவீதத்தில் இருந்து 18 சத வீதமாகப் பெறுமதி சேர் வரியை (வற்) அதிகரித்து நாட்டையே வங்குரோத்தாக்கிய ஜனாதிபதியின் எடுபிடிகள் மீண்டும் எழுச்சி பெற முயல்கின்றனர் என்றும்,7 மூளைகளைக் கொண்டவர்கள் என நாட்டையே வங்குரோத்தாக்கிய காக்கைகளுக்கு மைனாக்களும் மீண்டும் எழுச்சி பெற கடும் பிரயத்தனம் எடுத்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார்.

தொடர்ச்சி P2




## கணவலிக்கிழங்கை உண்டவர் மரணம்

எம். றொசாந்த்

கார்த்திகை கிழங்கை (கண்வலிக்கிழங்கு) உட்கொண்ட இளம் குடும்பஸ்தர் நோய்வாய்ப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, உடுத்துறை பகுதியை சேர்ந்த மாரிமுத்து சுப்பிரமணியம் (வயது 48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் கார்த்திகை பூ செடியின் கிழங்கை உட்கொண்ட நிலையில் , சுகவீனம் அடைந்துள்ளார், அதனையடுத்து அவரை வீட்டார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை (16) உயிரிழந்துள்ளார்.



### பொரலந்தை ஹோர்டன்தென்ன வரை

## "அனுமதியற்ற கட்டுமானங்களுக்கு இடமளிக்க வேண்டாம்"

பொரலந்த தொடக்கம் ஹோர்டன்தென்ன வரையான ஒஹிய பகுதியில் மேற்கொள்ளப்படும் அனுமதியற்ற நிர்மாணங்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அடமான அலைபேசி ஆளைக்கொன்றது

அடமானம் வைத்த கைத்தொலைபேசியை மீட்பதற்காக புதிய களனி பாலம் பகுதியில் இடம்பெற்ற வாக்குவாதத்தின் போது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் பலத்த காயங்களுக்கு உள்ளான அடமானம் வைத்த நபர் உயிரிழந்துள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



தொடர்ச்சி P2

## மஹிந்தவின் ஜாதகத்தை நான் பார்த்தேன்

யார் நாய், யார் சிங்கம் என்பது தேர்தல் நாளில் தெரியவரும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்தார்.




தொடர்ச்சி P2



## டிஜிட்டல் ஐடி

டிஜிட்டல் அடையாள அட்டை ஜனவரி முதல் வழங்கப்படவுள்ளது. இதற்காக நான்கு பில்லியன் ரூபாயை மானியமாக இந்தியா வழங்கவுள்ளது. இந்த அடையாள அட்டையில், கண்ணின் நிறம், கைரேகைகள் மற்றும் இரத்த வகை போன்ற நபரின் உயிர்த் தகவல்களின் தரவுகளும் அடங்கும்.

தொடர்ச்சி P2



## இயற்கை அனர்த்த எச்சரிக்கை நீடிப்பு

மழையுடனான காலநிலையை அவதானித்து 11 மாவட்டங்களில் உள்ள 48 பிரதேச செயலக பிரிவுகளுக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கும் மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அவற்றில், பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல, களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, பாலிந்தநுவர, கண்டி மாவட்டத்தின் யட்டிநுவர, கம்பனை மற்றும் பஸ்பகே கோரளை, கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட, மாத்தறை மாவட்டத்தின் அத்துரலிய மற்றும் பஸ்கொட மற்றும் கிரியெல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இரண்டாம் கட்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் நிவிதிகல, இம்புல்பே, கலவான மற்றும் பலாங்கொட ஆகிய இடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 7,181 பேர் பாதிப்பு

நாட்டில் வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணகளில் ஆறு மாவட்டங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால், சுமார் 2,256 குடும்பங்களைச் சேர்ந்த 7,181 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## “தனக்குத் தெரியாது”

பெரும்பான்மையான மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெமுனவுடன் திரண்டுள்ளதாகத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை விட்டு மக்கள் நகரவில்லை என்பதைக் கட்சி மாநாடு நிரூபித்துள்ளதாகவும் தெரிவித்தார். துளிர்விடும் என்ற நம்பிக்கையில் மக்கள் உள்ளனர் என்றார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகுதி தனக்கு இல்லை என்றும், கட்சி யாராக இருந்தாலும் வெற்றிபெற ராஜபக்ஷக்கள் பாடுபடுவார்கள் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது தொடர்பில் தனக்குத் தெரியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிளந்தது

சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டிலான் பெரேரா, கலாநிதி நாலக கொடஹேவா மற்றும் பேராசிரியர் ஜயசுமன ஆகிய நால்வரே இவ்வாறு கட்சிமாற உள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் இணைவது தொடர்பில் சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்கள் இரு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். நாட்டில் நிலவும் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினர்கள் ஒன்றிணைய வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தால், தொடர் நிபந்தனைகளுடனும் வேலைத்திட்டத்துடனும் கூட்டணியாகப் பிரவேசிக்க வேண்டுமெனவும் இல்லையேல் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவதில் அர்த்தமில்லை என்று டலஸ் அழகப்பெரும உட்பட பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் எம்.பிக்கள் குழு, நாவலவில் உள்ள கட்சி அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (12) கூடி இது தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடியதுடன், ஐக்கிய மக்கள் சக்தியில் ஒன்றிணைய வேண்டுமெனப் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், டிலான் பெரேரா, பேராசிரியர் சன்ன ஜயசுமண, கலாநிதி நாலக கொடஹேவா ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

அதன்படி அந்த நான்கு எம்.பிக்களும் விரைவில் சஜித் அணியில் இணைய உள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திர ஜனதா சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்களின் எண்ணிக்கை பதின்மூன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆபத்து

உடலுக்குள் உலோகம் நுழைவதால் புற்றுநோய் உள்ளிட்ட பல நோய்கள் வரும் அபாயம் இருப்பதாகவும் டாக்டர் விக்கிரமாராச்சி கூறுகிறார்.

இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த பென்சில்கள், வண்ண பென்சில்கள், பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்கள் மற்றும் மதிய உணவுப் பெட்டிகள் தொடர்பில் விசாரணையின் போது இவை தெரியவந்துள்ளதாக விக்கிரமாராச்சி மேலும் தெரிவித்தார்.

## வாளுடன் இளைஞன் கைது

மட்டுவில் கண்ணன் கோவிலுக்கு அருகில் வாள் வெட்டு கும்பல் ஒன்று மோதல் சம்பவம் ஒன்றுக்குச் செல்வதற்காகத் தயாராகி வருவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

தகவலின் பிராகாரம் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரை கண்டதும் வாள் வெட்டு கும்பலைச் சேர்ந்தவர்கள் அவ்விடத்தில் இருந்து தப்பியோடியுள்ளனர்.

பொலிஸார் துரத்திச் சென்று இளைஞன் ஒருவரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இளைஞனின் உடைமையில் இருந்து வாள் ஒன்றினையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் , சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடிய மற்றைய நபர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## “அனுமதியற்ற கட்டுமானங்களுக்கு இடமளிக்க வேண்டாம்”

ஒஹிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோத நிர்மாணங்களால் பாரிய சுற்றாடல் அழிவுகள் ஏற்பட்டுள்ளதைத் தாம் அவதானித்ததாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த நிலைமையை உடனடியாகத் தடுக்காவிட்டால் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊவா மாகாண நூலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (16) பிற்பகல் நடைபெற்ற பதுளை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

மேலும், மாவட்டத்தின் கட்டிடத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் போது உரிய அளவுகோல்களுக்கு அமையச் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

பதுளை மாவட்டத்தில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பிலும் கேட்டறிந்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகள் குறித்த முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகளிடம் இருந்து காணிகளை சட்டப்பூர்வமாக விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தடைகள் குறித்தும் அதிகாரிகள் கலந்துரையாடினர். இது தொடர்பில் பெருந்தோட்டக் கம்பனிகளுடன் கலந்துரையாடி பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு மேலும் பணிப்புரை விடுத்தார்.

பதுளை மாவட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலில், மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம், வீதிகள், போக்குவரத்து போன்ற பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், ஒரு சில பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகளை வழங்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

அடுத்த வருடம் முதல் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டம் மாவட்டங்களுக்கு வழங்கப்படும் எனவும், மலையக அபிவிருத்தித் திட்டம் அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் வெளிநாட்டு உதவியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் இருந்து பெறப்பட்ட நிதி என்ற அனைத்து நிதியையும் இணைத்து மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்று தெரிவித்த ஜனாதிபதி, அடுத்த ஆண்டு ஜூலை மாதத்திற்குள் குறித்த பணிகளைத் தொடங்க திட்டமிடப் பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## “நான் 24 நிமிடங்கள் இறந்தேன்”

சமூக ஊடகங்களில் கருத்து தெரிவித்த லாரன்,

தனது இதயம் துடிப்பதை நிறுத்திய பிறகு கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் சுயநினைவின்றி இருந்ததாகவும், அவசரகால பணியாளர்களின் முயற்சியால் 24 நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டதாகவும் கூறினார். ஆனால், அந்த வாரம் சுயநினைவு திரும்பியபோது நடந்த எதுவும் தனக்கு நினைவில் இல்லை என்றும் லாரன் கூறினார்.

கடந்த பெப்ரவரி மாதம் வீட்டில் இருந்தபோது தனக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதாகவும், அப்போது இருந்த கணவர், மாரடைப்பு ஏற்பட்டால் அளிக்கப்படும் முதலுதவியை அளிக்கத் தொடங்கியதாகவும், உடனடியாக அவசர சேவைக்கு அழைப்பு விடுத்ததாகவும் லாரன் கூறினார்.

அவளது இதயத்திற்குப் புத்துயிர் அளிக்கச் சிகிச்சை, துணை மருத்துவர்களுக்கு 24 நிமிடங்கள் எடுத்ததாகவும், தீவிர சிகிச்சையில் ஒன்பது நாட்கள் கழித்ததாகவும் லாரன் கூறினார். அவள் மீண்டும் உயிர் பெற்றபோது, அவளுடைய மூளையில் எந்தப் பாதிப்பும் இல்லை, மேலும் தான் 30 நிமிடங்கள் வலிப்பு நோயால் அவதிப்பட்டதாகச் சிகிச்சைப்பணியாளர்களால் தனக்குத் தெரிவிக்கப்பட்டதாக லாரன் மேலும் கருத்துத் தெரிவித்தார். லாரன் தனக்கு மரணத்தால் எந்த அனுபவமும் இல்லை என்றும் தான் இறந்து 24 நிமிடங்கள் ஆனதாகவும் கூறினார். நான் என் இரண்டாவது வாழ்க்கைக்கு எழுந்தேன் என்றும் கூறியுள்ளார்.

## டிஜிட்டல் ஐடி

முன்னதாக, டிஜிட்டல் ஐடிக்கு விண்ணப்பிக்கும்போது, விண்ணப்பப்படிவத்தில் 67 கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. தற்போது, 6 கேள்விகள் மட்டுமே கோரப்பட்டுள்ளது.

அதன்படி, புதிய டிஜிட்டல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது, பெயர், முகவரி, பிறந்த திகதி, பாலினம், தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றைக் கட்டாயம் பூர்த்திசெய்ய வேண்டும்.

புதிதாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இந்த புதிய டிஜிட்டல் அடையாள அட்டையை வழங்கி அதன் பிறகு படிப்படியாக ஒட்டுமொத்த சமூகத்திற்கும் டிஜிட்டல் அடையாள அட்டையை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

## 7,181 பேர் பாதிப்பு
## நாட்டில், வடக்கு, வடமத்திய மற்றும்

பதுளை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் அநுராதபுர மாவட்டங்களே பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள முகாமைத்துவ மத்திய நிலையம், இதனால், 32 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 490 பேர், தற்காலிக பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

## பிறப்பு சதவீதம் குறைந்தது

அந்த ஆவணத்தின்படி, 2013இல் இலங்கையில் பிறந்தவர்களின் எண்ணிக்கை 365,762 ஆகவும், 2022இல் பிறந்தவர்களின் எண்ணிக்கை 275,321 ஆகவும் உள்ளது.

2014இல் 349,744 பிறப்புகள், 2015இல் 336,097 பிறப்புகள், 2016இல் 329,630 பிறப்புகள், 2027இல் 326,052 பிறப்புகள், 2018இல் 328,112 பிறப்புகள், 2019இல் 319,010 பிறப்புகள், 2020இல் 842,840 பிறப்புகள், 2021இல் 288,848 பிறப்புகள். பதிவு செய்யப்பட்டதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை கூறுகிறது.

## ”காக்கைகள், மைனாக்கள் பறக்க முயல்கின்றன”

ஆட்சிப் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்காமல் தற்போது ஜனாதிபதி கனவில் இருப்பதாக மாநாட்டின் போது நாட்டையே வங்குரோத்தாக்கிய தலைவர் குறிப்பிட்டாலும், நாட்டை வங்குரோத்தாக்கிய மொட்டுத் தரப்புடன் இணைந்து கொண்டு நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்பதாலேயே இந்த பொறுப்பை ஏற்கத் தாம் விருப்பம் தெரிவிக்கவில்லை என்றும் தான் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மக்கள் ஆணையுடனேயே நாட்டைப் பொறுப்பேற்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

பியகம பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி, ஏனைய கட்சிகளைப் போல் ஊடகங்களில் வந்து கோப்புகளைக் காட்டி பொய்ப் படம் காட்டாது என்றும், நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்களை நடைமுறையில் சட்டத்தின் முன் எப்போதோ நிரூபித்து விட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு வலியுறுத்தினார்.

நாட்டின் வங்குரோத்து நிலையால் வறுமை 30 இலட்சத்திலிருந்து 70 இலட்சமாக அதிகரித்திருக்கும் நேரத்தில், வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேர்தலின் போது மக்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டாலும், ஆட்சிக்கு வந்த பின் அரசியல்வாதிகளே தீர்மானங்களை எடுக்கின்றனர் என்றும் இந்நிலையை மாற்ற வேண்டிய தருணம் வந்துள்ளதாகவும், கிராமத்திலும் நகரத்திலும் முடிவெடுக்கும் அதிகாரத்தை இளைஞர்களுக்கு வழங்குவதே ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இலக்கு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் முடிவெடுக்கும் உரிமை வழங்கப்படும் அதிகாரம் அளிக்கப்படும் என்றும் நாட்டில் சிறுவயது முதலே கல்வியை மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம்,மூச்சுத் திட்டங்களை எதிர்க்கட்சி செயல்படுத்தியபோது அரசாங்கம் சேறு பூசும் செயற்பாடுகளை முன்னெடுத்தாலும், ஐக்கிய மக்கள் சக்திக்குப் பெறப்பட்ட ஒவ்வொரு நிதியும் வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வி முறையை மேம்படுத்தவே பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## மஹிந்தவின் ஜாதகத்தை நான் பார்த்தேன்

கல்லில் அடிபட்டால், நாய் ஓடுகிறது, சிங்கம் அதைச் சவாலாக எடுத்து எதிர்த்து நிற்கின்றது என, முன்னாள் எம்.பியான பசில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இது மக்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக அமைந்துள்ளது என்றும் சஜின் வாஸ் தெரிவித்தார்.

கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில், வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் வைத்தே, பசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மக்கள் இன, மத பேதமின்றி யாருடைய அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியும் தேசம் அல்ல. எனவே, தேர்தல் நாளில் யார் நாய், யார் சிங்கம் என்று பார்க்கலாம் என்றும் சஜின் வாஸ் குணவர்தன சவால் விட்டார்.

2001ஆம் ஆண்டு இந்தியாவில் உள்ள ஜோதிடரிடம் மஹிந்த ராஜபக்ஷவின் ஜாதகத்தைப் பார்க்கச் சென்றேன். வேண்டுமானால் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்கலாம். அவர் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு, உங்கள் குடும்பத்திலிருந்து ஒரு ராஜபக்ஷ வந்து ஒட்டுமொத்த தலைமுறையின் நற்பெயரை அழித்துவிடுவார் என்றார். அது கோட்டாபய ராஜபக்ஷ பற்றி அல்ல. பசில் ராஜபக்ஷ பற்றியது என்றும் சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்தார்.

## பாரிய கண்டி அபிவிருத்தித் திட்டத்தின் இறுதி வரைவு ஜனாதிபதியிடம் கையளிப்பு

பாரிய கண்டி அபிவிருத்தித் திட்டத்தின் இறுதி வரைவு ஞாயிற்றுக்கிழமை (17) முற்பகல் கண்டி ஜனாதிபதி மாளிகையில் வைத்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

பாரிய கண்டி அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவது தொடர்பில் ஜெய்காவுடன் கலந்துரையாடவுள்ளதாக இது தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

2023 பெப்ரவரி மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி நகரை நன்கு திட்டமிடப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட நகரமாக மாற்றுவதற்கான பிரேரணை அமைச்சரவையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க தலைமையில் கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்காகச் சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரிகள் மற்றும் நகரத் திட்டமிடல் துறையில் நிபுணர்கள் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அதற்கிணங்க, கட்டுகஸ்தொட்டை, கண்டி, குண்டசாலை ஆகிய பகுதிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தி பாரிய கண்டி அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

மத்திய மாகாண ஆளுநர் உட்பட கண்டி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களிடம் இந்த அபிவிருத்தித் திட்டம் முன்வைக்கப்பட்டு, மேலதிக கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்ற பின்னர், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அபிவிருத்தித் திட்டம் குறித்து விரிவாக மீளாய்வு செய்யப்பட்டதுடன், கண்டி நகரின் வரலாற்று மற்றும் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்து, மக்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் வகையில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நாட்டில் நிறுவப்படவுள்ள பல்கலைக்கழகங்களில் சிலவற்றைக் கண்டி நகரில் அமைக்க எதிர்பார்க்கப்படுவதாகவும், இதனால் எதிர்காலத்தில் கல்விக்கான கேந்திரமாகக் கண்டி மாறும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், அமைச்சர்கள், அரசியல்வாதிகள், நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட அதிகாரிகள், பாதுகாப்புத் திணைக்கள சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அடமான அலைபேசி ஆளைக்கொன்றது

சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் வெல்லம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 18 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் களனி சேதாவத்தை மாவட்டத்தைச் சேர்ந்த 33 வயதுடையவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கசிப்புடன் இளைஞர்கள் இருவர் கைது

அஸ்ஹர் இப்றாஹிம்

மட்டக்களப்பு- கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஈரளக்குளம், பஞ்சுமரத்தடி காட்டுப் பிரதேசங்களில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின்போது, 8 பாரிய பரல்கள் கசிப்பு மற்றும் கோடா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரடியனாறு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸாரால் குறித்த சுற்றி வளைப்பை மேற்கொண்டதாகவும் கைது செய்யப்பட்ட இருவரும், சந்திரவெளி மற்றும் சித்தாண்டி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தாயை கட்டியணைக்க முயன்ற சிறுவனை பந்தாடிய பஸ்

பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு - ஆறுமுகத்தான் குடியிருப்பில் இடம்பெற்ற வீதி விபத்தில் 16 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ள சம்பவம் சனிக்கிழமை (16) பதிவாகியுள்ளது.

ஏறாவூர் தாமரைக்கேணியை சேர்ந்த அமீர்தீன் யாசீர் அறபாத் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்முனைக்குச் சென்ற தாயின் வருகை எதிர்பார்த்து பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்த சிறுவன் தாயைக் கண்டதும் பிரதான வீதியை கடக்க முற்பட்டபோது, தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு சொந்தமான பஸ் ஒன்றின் மீது மோதி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்

குறித்த பஸ்ஸின் சாரதி ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன்

சிறுவனின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.



# தக்காளி சோஸ் கலன்கள் அழிப்பு

நிறமூட்டி எந்தவிதமான உணவு தயாரிப்பு நியதிக்கும் உட்படுத்தாது தயாரிக்கப்பட்ட சுமார் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான தக்காளி சோஸ் கலன்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டுள்ளன.

ஹோமாகம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இந்திக கடுதம்ப தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பாதுக்க, வட்டறுக்க, யொவுன்கம பிரதேசத்தில் அமைந்திருந்த தொழிற்சாலையில் இந்த சோஸ் மாதிரிகளைப் பெற்று பரிசோதனை மேற்கொண்டதற்கமைய இது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றது என்பதோடு, இந்த சோஸில் தக்காளி சேர்க்கப்படவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

குற்றத்தை ஒப்புக்கொண்ட நிறுவனத்திற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும், ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட சோஸ் கலன்களை அழிப்பு செய்யுமாறும் ஹோமாகம நீதிமன்ற நீதவான் நிப்புலி லங்காபுர உத்தரவிட்டுள்ளார்.

# சஜித்தால் கைவிடப்பட்ட வீடுகளை புனரமைக்குக

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது, கைவிடப்பட்ட 2,150 உதாகம்மானவில் பாதியாகக் கட்டப்பட்ட 39,815 வீடுகளின் பணிகளை விரைந்து முடிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



மேலும், எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படவுள்ள சோலார் பேனல் வீடமைப்புத் திட்டம் மற்றும் கிராம வேலைத் திட்டத்தி ற்கான மின் உற்பத்தி நிலை யத்தின் கீழ், வெளிநாட்டு முதலீட்டாளரினால் இந்த வீடுகளின் நிர்மாணப் பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படும் எனவும் அமைச்சர் பிரசன்ன குறிப்பிட்டுள்ளார்.

# “குழப்பும் அரசியல் கலாசாரம் உள்ளது”

இளைஞர்களுக்கு அரசியல் வாக்குறுதிகளை வழங்கி இளைஞர்களை குழப்பும் அரசியல் கலாசாரம் எமது நாட்டில் காணப்படுகின்ற போதிலும், ஐக்கிய மக்கள் சக்தி பெரும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிங்கிரிய தொகுதி ஐக்கிய இளைஞர் சக்தியின் குழு கூட்டத்தில் சனிக்கிழமை (16) கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

தனது வேலைத்திட்டம் பல முக்கிய பகுதிகளை உள்ளடக்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்நாட்டின் கல்வி முறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தத் தாம் எதிர்பார்ப்பதாகவும், நாட்டிற்குத் தரமான கல்வி முறை தேவை என்றும் அதில் குழந்தைப்பருவம், ஆரம்பப் பருவம், இடைநிலை, மூன்றாம் நிலை என நான்கு பகுதிகளாக உள்ளது என்றும் இது முறையான கல்வி மாற்ற முறைக்குட்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



சர்வதேச தொழிலாளர் சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நவீன மற்றும் எதிர்கால கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும் என்றும் இதற்காக ஒவ்வொரு பாடசாலையிலும் ஸ்மார்ட் வகுப்பறை, ஆங்கில மொழி மையம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் இதனூடாக ஸ்மார்ட் கல்வி, ஸ்மார்ட் பாடசாலை, ஸ்மார்ட் மாணவன், ஸ்மார்ட் இளைஞன், ஸ்மார்ட் குடிமகன், ஸ்மார்ட் நாடு உருவாகும் என்றும் இதனை அடைய கல்வியில் முழுமையான மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் கிராமிய நகர கல்வி சமாந்தரமாக செல்ல வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இளைஞர்களும் தொழில்முனைவோராகச் செயல்படும் திறன்களை வளர்த்து, தொழில் ஒன்றைத் தொடங்குவதற்கான ஆரம்ப மூலதனத்தை அவர்களுக்கு வழங்கி, தேசிய உற்பத்தியாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் முயற்சியாண்மையாளர்களை வலுப்படுத்த வேண்டும் என்றும் இளைஞர்களுக்கு அவர்களின் திறமையின் அடிப்படையில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மேலும், இளைஞர்களை தொழில்முனைவோராக்கி முடிவெடுக்கும் உரிமையும் அபிவிருத்தி முன்னுரிமைகளை உருவாக்கும் உரிமையும் வழங்கப்படும் எனவும் கிராமம் மற்றும் நகரத்தின் தேவைகளை இளைஞர்களே தீர்மானித்துச் செயற்படுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுமெனவும், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

அதோடு, நமது நாடு முட்டையில் தன்னிறைவு அடையவில்லை என்றும் இதற்குத் தேவையான மூலப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதே இதற்குக் காரணம் என்றும் இதனால் முட்டையைக் கூட வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது என்றும் இதன் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணியைக் கூட இழக்க நேரிட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

# கடலாமையை இறைச்சியாக்கியவர் கைது

அஸ்ஹர் இப்றாஹிம்

அரிய கடல்வாழ் உயிரினமான கடலாமையொன்றை கொன்று இறைச்சியாக்கி தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், மீனவரொருவர் கைது செய்யப்பட்டதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை பொலிஸாருக்கு கிடைக்கபெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், வாதுவ உல்லாச விடுதியொன்றை சோதனையிட்டபோது விடுதியின் பின்புறம் பகுதியில் சூட்சுமமான முறையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த 10 கிலோ கிராம் ஆமை இறைச்சி மற்றும்ஆமை முட்டைகள் 80 மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வாதுவ தம்பியகம பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய மீனவர் என தெரியவந்துள்ளது.





# வழுக்கி விழுந்தவர் மரணம்

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட குமரி பிரிவை சேர்ந்த 62 வயதுடைய சிவனு ராஜேந்திரன் என்பவர் கடும் மழை நேரத்தில் பாலமொன்றின் பயனித்தபோது, வழுக்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (17) பதிவாகியுள்ளது.

குறித்த நபரின் உடலம் பிரேதப் பரிசோதனைக்காக டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வான் கதவுகள் திறப்பு

06) செ.தி.பெருமாள்

தொடர் மழையால் காசல்ரீ, விமலசுரேந்திர, கென்யோன் ஆகிய மூன்று நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் சில திறக்கப்பட்டுள்ளன.

இதனால் தாழ் நிலப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென நீர் மின்னுற்பத்தி நிலையத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார்.



# மரம் முறிந்து விழுந்தது

கௌசல்யா

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் (தலவாக்கலை) டெவன் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (17) பிற்பகல் 1.30 மணியளவில் பாரிய மரமொன்று முறிந்து விழுந்ததன் காரணமாக குறித்த வீதியினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

முறிந்த மரத்தை அகற்றும் பணிகளை பிரதேச மக்களின் உதவியுடன் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# “பலவந்தமாக மக்களை வெளியேற்றி காணிகளை அபகரிக்க அனுமதியோம்”

ஹஸ்பர்

அபிவிருத்தி எனும் பெயரில் மக்களைப் பலவந்தமாக வெளியேற்றி, அக் காணிகளை அபகரித்துக் கொடுத்தால் அதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன், அதற்கு எதிராக மக்களோடு சேர்ந்து போராட்டம் செய்வோம் என சூளுரைத்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட மத்தியக் குழுக் கூட்டம் கிண்ணியா உப்பாறு தனியார் விடுதியில் சனிக்கிழமை (16) இடம்பெற்றுள்ளது.




அதில் பங்கேற்றிருந்த ஊடகவியலாளர் ஒருவர் “திருகோணமலை மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்தியாவுக்கு சில பகுதிகள் வழங்கப்பட உள்ளன. இதனால் இப்பிரதேசத்தில் உள்ள பலர் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படும் இது சம்பந்தமாக உங்கள் நிலைப்பாடு என்ன?” என கேள்வி எழுப்பியபோதே இவ்வாறு பதிலளித்தார்.

நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தவர்களுக்கு அதற்கான செலவைக் கொடுக்கச் சொல்லி உள்ளார்கள். இவர்கள்தான் இந்த நாட்டினுடைய வங்குரோத்துக்கு காரணம் என தீர்ப்பு கொடுத்துள்ளார்கள். இவர்களால் பல பேர் பாதிக்கப்பட்டு நஷ்டமடைந்துள்ளனர். சில நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

இவர்களிடம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதற்கான நஷ்டஈட்டுப் பணத்தை வழங்குவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கி உள்ளது என தெரிவித்துள்ளார்.

# சந்தித்துப் பேச்சு

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ரே தலைமையிலான உயர்மட்ட குழுவினர் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் இனங்களுக்கிடையிலான நல்லுறவை வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.





**விற்பனை**

அவசர தேவைக்காக TATA EX 2 டீமோ பட்டா படி ரக வாகனமொன்று 18 இலட்சத்திற்கு ராஜகிரியவில் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகொள்ள:
0718279760 / 0703805297

# இழிந்தவர்களின் இடைவிடாத தாக்குதலுக்கு உள்ளாகும் மக்கள்

பண்டிகை காலம் வந்துவிட்டது. பொருளாதார நெருக்கடிக்கு மேலதிகமாக, பண்டிகைக் காலங்களில் அனைத்து வகையான கடத்தல்காரர்கள், இடைத்தரகர்கள் மற்றும் கொள்ளையர்களாலும் மக்கள் வெட்கக்கேடான சுரண்டலுக்கு ஆளாகின்றனர். இந்தப் பண்டிகைக் காலத்தில் 'கண்டால் குழி தோண்டிப் புதைக்கும்' இழிந்தவர்களின் இடைவிடாத தாக்குதலுக்கு மக்கள் ஆளாக நேரிடும் என்பதில் சந்தேகமில்லை.

சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரித்துள்ளது. ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் மொத்த விலை சுமார் 420 ரூபாவாகவும், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் மொத்த விலை சுமார் 350 ரூபாவாகவும் உள்ளது.

வெங்காயம் ஒரு மூலப்பொருள் மட்டுமே. ஒரு கிலோ கிராம் சர்க்கரை முதல் முட்டை வரை அனைத்து வகையான உணவுப் பொருட்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்து வருகிறது. காய்கறிகளின் விலை சாமானியர்களுக்கு எட்டாத அளவிற்கு உயர்ந்துள்ளது. தேங்காயின் கொள்முதல் விலையும் பாரியளவில் அதிகரித்துள்ளது.

தொலைதூரக் காலத்தில், கை நிறைய பணத்துடன் சந்தைக்குச் செல்பவர்கள், ஒரு பை மட்டுமல்ல, இரண்டு அல்லது மூன்று பைகள் நிறையப் பொருட்களைக் கொண்டு வரலாம். ஆனால், இப்போதெல்லாம், பணம் நிறைந்த பையை எடுத்துச் சென்றாலும், ஒரு பை நிறையப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாது.

தொடர் மழையால் உணவுப் பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. தொடர்ந்து பெய்த கனமழை விவசாயத்தைக் கடுமையாகப் பாதித்தது. மேலும், பண்டிகை காலம் என்பதால் தேவையும் அதிகரித்துள்ளது. இவை சந்தையில் நிர்வகிக்கப்பட வேண்டியவை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நம் நாட்டில் அத்தகைய மேம்பட்ட வழிமுறை இல்லை.

காய்கறிகள், வெங்காயம் போன்றவற்றின் விலை உயர்வு ஒருபுறம் விவசாயிக்கு நல்லது. விலை உயர்வின் பலன் விவசாயிக்குக் கிடைத்துள்ளதா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக, இடைத்தரகர்கள் எப்போதும் பெரும் லாபம் ஈட்டினர். விவசாயி மற்றும் நுகர்வோர் இருவரும் இரக்கமின்றி இடைத்தரகர்களைச் சுரண்டுகின்றனர்.

விவசாயி மற்றும் பெரும்பான்மையான நுகர்வோரை நாம் பார்க்க வேண்டும். இவர்களில் பெரும்பாலானோர் நிலையான மாத வருமானம் பெறுகின்றனர். உணவுப் பொருட்களின் விலை உயர்வு நிலையான வருமானம் உள்ளவர்களுக்குக் கட்டுப்படியாகாது. கூடுதல் வருமான ஆதாரங்களைக் கண்டறிவதாக அவர்கள் கூறினாலும், பொருளாதார நெருக்கடியின் காரணமாகக் கூடுதல் வருமானத்திற்கான அனைத்து ஆதாரங்களும் சுருங்கிவிட்டன.

இடைத்தரகர்களால் தொடர்ந்து சுரண்டப்படும் விவசாயிகளையும் பெரும்பான்மையான நுகர்வோரையும் பாதுகாக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த தருணத்தில், அதிகாரிகளிடம் இருந்து இதுபோன்ற அப்பாவி கோரிக்கையை மட்டுமே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

துன்பங்களை, இன்பங்களுக்குள் திணித்தலாகாது. சந்தோஷமான தருணங்களில் கூட, துன்பங்களை நினைத்து உருகிக்கொண்டிருக்கும் அல்லது புலம்பிக்கொண்டிருக்கும் பிரகிருதிகள் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

துன்பங்களை, சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது எனப் பலர், தங்களின் மதிநுட்பத்தைப் பயன்படுத்துவார்கள். அல்லது, தங்களுக்கு நம்பிக்கையானவர்களுடன் ஆலோசனை செய்வார்கள். ஆனால், இத்தகைய அணுகுமுறைகளை விட்டுவிட்டு, சிலர் தமது மனம் போன போக்கின்படி, நடந்துகொள்வார்கள். இது அழிவின் பாதைக்கே இட்டுச்செல்லும்.

எந்தவொரு மனிதனின் மனநிலையும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அன்றாடம், ஏதோவிதமாக வரும் சின்னச் சின்ன பிரச்சினைகள் வரலாம். அவை எவற்றையும் ஊதிப் பெருப்பிப்பது அறிவீனம்.

சுலபமாகக் கிடைக்கும், உழைப்பற்ற வருமானங்கள் நிரந்தரமானவை அல்ல, வாழ்க்கையின் உச்சத்தைத் தொட்டவர்கள், மேலான கஷ்டங்களை அனுபவித்து, அதிலிருந்து மீண்டவர்களாகவே இருப்பார்கள்.

குறிப்பிட்டவர்களுக்கு என சோதனை வருவதில்லை. சோதனைகளுக்குள் மூழ்குவது வாழ்க்கை அல்ல; எல்லாமே புதியன அல்ல; புத்திசாலிகள், அறிவுத்திறன் உள்ளவர்கள், எதுநடந்தாலும் தொடர்ந்து, சிந்தித்து, சரியாகச் செயற்பட்டு, தங்கள் வழியில் செல்கிறார்கள். துணிவுதான் மனிதனை உருவாக்குகின்றது.

நன்றி: பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

லக்ஸ்மன்

தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை

# கருத்தில் கொள்ளாத 'இமயமலை பிரகடனம்'

இலங்கைக்கு உள்ளேயும், நாட்டுக்கு வெளியேயுள்ள புலம்பெயர் தேசங்களிலுமென இமயமலைப் பிரகடனம் விமர்சிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் வருகின்றது. தமிழ் மக்களின் நிலைப்பாடுகளைக் கருத்தில் கொள்ளாத "இமயமலை பிரகடனம்" என்றே அதன் மீதான விமர்சனங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இலங்கையில் யுத்தம் மௌனிக்கப்பட்டதையடுத்து 2009ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பரிஸில் 14 நாடுகளிலுள்ள தமிழ் அமைப்புகள் இணைந்து உருவாக்கிய உலகத் தமிழர் பேரவையிலிருந்து ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 10 அமைப்புகள் அடுத்தடுத்த வருடங்களில் விலகின.

பிரித்தானியத் தமிழர் பேரவை, பிரான்ஸிலுள்ள தமிழர்கள் பாதுகாப்பு மையம், ஐரிஷ் தமிழர் பேரவை, சுவிஸ் தமிழ் நடவடிக்கைக் குழு மற்றும் மொரீஷியஸிலுள்ள இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்பு போன்றனவும் இதில் அடக்கம். அதேநேரம், அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், அமெரிக்காவின் தமிழ் செயற்பாட்டுக் குழு என்பனவும் உலகத் தமிழர் பேரவையில் இருந்து விலகியிருக்கின்றன.

அந்தவகையில், புலம்பெயர் நாடுகளிலுள்ள அனைத்து அமைப்புக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக உலகத் தமிழர் பேரவை அமையாது என்பதுடன் ஒரு சில தனிப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டதாக உள்ள நிலையில் இதனை ஒரு ரப்பர் முத்திரை அமைப்பாகவே தமிழர்கள் பார்க்கின்றனர் என்ற கருத்துக்களும் நிலவுகின்றன.

உலகத் தமிழர் பேரவை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசால் 2014ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டது. இருப்பினும் 2015ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசினால் அத்தடை நீக்கப்பட்டது. மீண்டும் சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்று அரகலய மூலம் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் தடை செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆட்சிக்கு வந்ததையடுத்து 'அவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவி செய்வதில்லை' புதிய நாட்டைக் கட்டியெழுப்பும் போது புதிய பொருளாதாரம் அவசியம் என கூறி ஓகஸ்ட் 2022இல் அவர்கள் மீதான தடை நீக்கப்பட்டது.

இந்தவகையில்தான், பௌத்த பிக்குகளை உள்ளடக்கியதாக நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றின் முடிவில் இமயமலைப் பிரகடனம் உருவாக்கப்பட்டது. இந்தப் பிரகடனம் முக்கியமானது, நாட்டில் ஒற்றுமை மற்றும் ஸ்திரத்தன்மை இல்லாமல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தது.

பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் பேரவைக்கும் சில பௌத்த தேரர்களுக்கும் இடையே நடைபெற்ற கூட்டம், 'இமயமலைப் பிரகடனம்' என்பவை ஜனாதிபதிக்கும் குறிப்பிட்டளவான பௌத்த பிக்குகளுக்கும் உலகத் தமிழ்ப் பேரவைக்கும் முக்கியமானதாக இருந்தாலும் தமிழர்களின் கடும் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது என்பதே வெளிப்படையானது.

இதில், இலங்கையில் ஒரு பல்லினத்தன்மையை ஏற்படுத்தி அதன் மூலம் அனைத்துச் சமூகங்களின் நல்வாழ்விற்கும் இமயமலைப் பிரகடனம் வழிவகுக்கும் என்று உலகத் தமிழர் பேரவை கூறுவதை ஏனைய தமிழர் அமைப்புக்களும், உள்நாட்டிலுள்ள அரசியல் தரப்பினரும் கடுமையாகச் சாடியுள்ளதுடன், அதைப் புறந்தள்ளுவதாக அறிவித்திருக்கின்றன.

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் பௌத்த பீடங்களே நாட்டை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அதுவே தமிழ் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு இடையே, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்படுவதற்கும், இரத்து செய்யப்படுவதற்கும் முக்கிய காரணமாக இருந்து வந்துள்ளது.

இலங்கையில் இன மோதல்களுக்கான வரலாற்றுப் பின்னணி மிகச் சிக்கலானதாகவும் மோசமானதாகவுமே நகர்ந்து வந்துள்ளது. இலங்கையில் தொடர்ச்சியாக வரலாற்று ரீதியாகத் தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலையில் அரசின் பங்கிருந்துள்ளது என்பதற்கு உறுதியாக ஆதாரங்கள் உள்ளன. யார் ஆட்சியில் இருந்தாலும் ஒரே இன, ஒரே மொழி மற்றும் சிங்கள - பௌத்த நாடு என்கிற நோக்கம் முன்னெடுக்கப்படுவதிலேயே அவர்கள் குறியாக இருந்துள்ளனர். இந்த கூட்டம் தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் எண்ணத்தில் அரசியல் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டது.

இந்த "பிரகடனம்" தொடர்பிலான முழு நடவடிக்கையும் எவ்விதமான கலந்துரையாடலும் இன்றி இரகசியமாகச் செய்யப்பட்டது என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்துடன் ஆரம்பிக்கின்ற தமிழர்களின் ஆயுதப் போராட்டத்துக்கான விதை வளர்ந்து விருட்சமாகி எழுந்து நிற்கின்றது. "இமயமலைப் பிரகடனம்" போன்று பல பிரகடனங்கள் உருவாக்கப்பட்டாலும் எந்தவொரு தீர்மானமும் பாதிக்கப்பட்டவர்களுடனான கலந்துரையாடல் தவிர்க்கப்பட்டு உருவாக்கப்படுவதில் எந்தப் பயனும் இல்லை.

> **"இலங்கையில் வரலாற்று ரீதியாக தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலையில் அரசின் பங்கிருந்துள்ளது என்பதற்கு உறுதியாக ஆதாரங்கள் உள்ளன**

போர் ஓய்வுக்கு வந்ததன் பின்னர் இதே போன்று அனைத்து உலகத் தமிழர் பேரவை எடுத்த முயற்சிகள் யாவும் மோசமான தோல்வியைக் கண்டிருந்தன. இதற்கு காலத்தே பயிர் செய்யாமை கூட காரணமாக இருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தின் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தில் ஓரளவுக்குத் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள் சற்றுக் குறைந்திருந்தாலும், தற்போதைய அரசாங்கத்தில் மாவீரர் தினத்துக்கான தடை அதன் பின்னரான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான கைதுகள், அடக்குமுறைகள் தொடர்ந்து கொண்டிருக்கிற வேளையில் உலகத் தமிழர் பேரவை இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. இது அவர்களது முயற்சிக்கு முக்கிய தடையாக இருக்கிறது என்று சொல்லாம்.

அதாவவது அரசின் மீது கடுமையான அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டிய தருணத்தில் அரசின் மோசமான செயற்பாடுகளை மூடி மறைக்கின்ற செயற்பாடாகவே உலகத் தமிழர் பேரவையின் முயற்சிகள் பார்க்கப்பட்டன. அதே நேரத்தில் இலங்கை அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில் உள்நாட்டிலேயே தீர்வு காணும் வகையிலான அறிவிப்புக்களே கடந்த காலங்களிலும் மிக அண்மைக்காலத்திலும் இருந்து வந்திருக்கின்றன. இந்த நிலையில், உலகத் தமிழர் பேரவையினை எந்த அடிப்படையில் உள்வாங்கப்பட்டிருக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

அதே நேரத்தில், உண்மையைக் கண்டறிந்து இணக்கப்பாட்டிற்கு வழிவகுக்கும் வகையில் உத்தேசிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவை அமைப்பதற்குப் புலம்பெயர் அமைப்புகளுடன் வெற்றிகரமாகப் பேசி முடிவெடுத்துள்ளதாக, சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு வாய்ப்பை அளிக்கலாம். அதற்கு உலகத் தமிழர் பேரவை பயன்படுத்தப்படுமா என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

அந்தவகையில்தான், தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள், மனிதக்குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றுக்கு பொறுப்புக்கூறல் நடைபெற்றேயாகவேண்டும் என நகர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் ஏன் இவ்வாறான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என்கிற வகையிலும் சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. வரலாற்று ரீதியாக அரசியல் தீர்விற்கான உள்ளூர் பொறிமுறைகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்பதும் தீர்வானது சர்வதேசத்தின் பிரசன்னத்துடன் நடைபெற வேண்டும் அவ்வாறில்லாத இடத்தில் மீண்டும் ஒரு முறை தமிழர்கள் ஏமாற்றப்படலாம் என்ற எதிர்வு கூறல்களும் வந்த வண்ணமிருக்கின்றன.

இந்தப்பின்னணியில்தான் நேபாளத்தில் மேற்கொள்ளப்பட்ட இமயமலைப் பிரகடனம் தலைமையில்லாதவர்களாக மாறிக் கொண்டு வருகின்ற இனப்பிரச்சினைக்கான தீர்வை நியாயமானதாக எதிர்பார்க்கின்ற தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடு என்று வர்ணிப்பப்படுகிறது. இலங்கையின் பௌத்த பீடங்களின் பிரசன்னமில்லாது அல்லது ஒத்துழைப்பில்லாது இலங்கைத் தமிழர்களுக்கு தீர்வில்லை என்ற உண்மை வெளிப்படை என்றாலும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் எதிர்ப்புகள் விமர்சனங்கள் புறக்கணிப்புகளுக்கு மத்தியில் இமயமலைப்பிரகடனத்தின் ஊடு தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகள் நிறைவேறுமா என்பது சந்தேகமே.

## கடிதங்கள்

### அரக்கொட்டியான் தாக்கம்

திருகோணமலை - தம்பலகாமம் கமநல சேவை பிரிவுக்குட்பட்ட விவசாயிகள் பல இடர்பாடுகளை எதிர்நோக்குவதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், உரிய நேரத்துக்கு உரப் பசளை கிடைக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பாலம்போட்டாறு பகுதியை அண்டிய விவசாயிகள் தங்களது நெற் செய்கையின்போது அரக்கொட்டியான் தாக்கம், ஒரு வகை மஞ்சல் நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதனால் விளைச்சல் குறைவாகிடுமோ எனவும் அங்கலாய்க்கின்றனர்.

இதன் காரணமாக அதிக விலையைக் கொண்ட எண்ணெய்யை வாங்கி அடித்தாலும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாகவே காணப்படுவதாகவும் இதனை அதிக விலை கொடுத்து வாங்கி நஷ்டமடைவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பில் உரிய காலத்துக்கு உரமானியங்களை வழங்குமாறும் சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். - ஹஸ்பர்



# இலங்கையில் 10 இறப்புகளில் 8 இறப்புகள் தடுக்கக்கூடியவை



**உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் இலங்கையின் சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, இலங்கையில் 10 இறப்புகளில் 8 இறப்புகள் தடுக்கக்கூடிய இறப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இம்மரணங்களுக்கு பிரதான இரு காரணயாக புகையிலை மற்றும் மதுபானம் பாவனை ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன், எமது நாட்டில் மாத்திரம் மதுபானம் அருந்துவதால் ஒரு நாளைக்கு சுமார் 40-50 மரணங்கள் ஏற்படுகின்றன.**

மதுபானம் பாவனை எமது நாட்டிற்கு பெரும் சுமையாகும். கடந்த 2022ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற மதுபானம் வரித் தொகை ரூபாய். 165.2 பில்லியன்களாகும். இருப்பினும், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தினால் (UNDP) நடத்தப்பட்ட இலங்கையில் மதுபானக் கட்டுப்பாட்டுக்கான முதலீட்டு ஆய்வில் மதுபானம் பாவனையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள சுகாதார மற்றும் பொருளாதார இழப்பு ரூபாய் 237 பில்லியன்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எமது நாட்டு மக்கள் மதுபானத்திற்காக ஒரு நாளைக்கு ரூபாய் 590 மில்லியன் ரூபாவும் சிகரட் பாவனைக்காக நாளொன்றுக்கு ரூபாய் 380 மில்லியன் ரூபாய் எனும் பெருந்தொகையைச் செலவழிக்கின்றனர், இச்செலவீனம் ஒரு பாரிய பொருளாதார சுமையை விளைவிக்கிறது. இந்நிலைமைக்கு மத்தியில் மதுபானம் மற்றும் புகையிலை நிறுவனங்களிடமிருந்து அரசாங்கத்திற்கு வரி வருவாயாக ஈட்டக்கூடிய பாரிய தொகையானது மதுபானம் மற்றும் புகையிலை பொருட்களுக்கான முறையான வரிக் கொள்கையின்மையால் இழக்கப்படுகிறது.

மேலும், கஞ்சா போன்ற போதைப்பொருள் வகைகளை; பயன்படுத்துவதால் பலர் பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இலங்கை மனநல மருத்துவர்கள் கல்லூரியின் கூற்றுப்படி, கஞ்சா பாவனையின் விளைவாக, இளைஞர்களின் அறிவாற்றல் செயற்பாடுகளில் பாதகமான தாக்கம் ஏற்படுதல், மனநோய் ஏற்படுதல் மற்றும் கருவின் நரம்பியல் வளர்ச்சியில் ஏற்படும் பாதிப்புக்கள் போன்றன இளைய சமுதாயத்தினருக்கு ஏற்படுகின்றன.

2024 வரவு- செலவுத் திட்டத்தில், பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன, அவை மதுபானம் பாவனையை ஆரம்பிக்கும் வீதத்தை அதிகரிப்பதற்கு வழிவகுக்கும், மேலும் மதுபானம் அருந்துதல் மற்றும் மதுபானத்தினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் என்பனவும் பொதுமக்கள் மத்தியில் அதிகரிக்கலாம். 2024 வரவு- செலவுத் திட்டத்தில் மதுபானத்தின் தாராளத்தன்மை மற்றும் ஒட்டுமொத்த பாவனையை அதிகரிப்பதற்கான பல முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாட்டில் போதைப்பொருள் பிரச்சினையை ஒழிப்பதற்கு அரசாங்கம் பாராளுமன்றக் குழுவொன்றை நியமித்துள்ளமை அதே வேளை இவ்வாறான பரிந்துரைகள் வெளிவருகின்றமை கவலையை எழுப்புகிறது. எவ்வாறாயினும், இந்த முன்மொழிவுகள் சட்டவிரோத மதுபான பரவலைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டவை என்ற ஒவ்வொரு பரிந்துரைக்குப் பின்னாலும் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும், இவ்வாறான பரிந்துரைகள் சட்டவிரோதமான மதுபானத்தைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த வழிமுறையல்ல, மாறாக எதிர்காலத்தில் மதுபான பாவனையையும், அதன் பிரச்சினைகளையும் அதிகரிப்பதற்கு இப்பரிந்துரைகள் காரணியாக அமையும்.

மதுபானம், புகைப்பொருள் மற்றும் போதைப்பொருள் தடுப்புத்துறையில் பணிபுரியும் ஒரு பொறுப்பான அமைப்பாக, கருத்தில் கொள்ளவேண்டிய பல முக்கிய விடயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். மதுபானம் மற்றும் கஞ்சா தொழில்களுக்கு சாதகமாகத் தோன்றும் முன்முயற்சிகளைப் பாதீட்டு வாசிப்பு சுட்டிக் காட்டியுள்ளது. இது பின்வரும் முக்கிய கூறுகளைச் சேர்ப்பதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது,

### மதுபான சாலையை திறக்கும் நேரத்திற்கான நெகிழ்வு தன்மை:

மதுபான சாலைகளைத் திறந்து வைக்கும் நேரம் அதிகரிக்குமிடத்து மதுபானத்தின் தாராளத்தன்மை அதிகரித்து பாவனை அதிகரிப்பதற்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும். சட்ட ரீதியானதோ சட்ட விரோதமானதோ அனைத்து வகையான மதுபானம் வகைகளும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். எனவே, நாட்டில் மதுபானம் பாவனையை குறைக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். கடந்த 1995இல் நிதி அமைச்சரால் இதேபோன்ற முயற்சி எடுக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் சட்டவிரோத மதுபானத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பியர் விலைகள் 50க்கும் அதிகமாகக் குறைக்கப்பட்டன, இதன் விளைவாக பியர் பாவனை அதிகரித்தது மற்றும் சட்டவிரோத மதுபான பிரச்சினைக்குத் தீர்வுகள் எவையும் கிட்டவுமில்லை. WHOஇன் மதுபானம் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின்படி, மதுபானம் கிடைப்பதில் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல் மற்றும் வரி விதிப்பு மற்றும் விலைக் கொள்கைகள் மூலம் மதுபானம் கிடைப்பதைக் குறைத்தல் ஆகியவை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட, ஒரு நாட்டிற்குள் நிறுவப்படக்கூடிய மிகவும் செலவு குறைந்த மற்றும் பயன்படக்கூடிய மதுபான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

### சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கான விதிமுறைகளின் திருத்தம்:

இந்த திருத்தம் சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதை முன்மொழிவுகள் எடுத்துக் காட்டுகின்றன, இருப்பினும் சுற்றுலாவுக்குப் பிரபலமில்லாத இடங்களிலும் விதிமுறைகள் வைக்கப்பட்டுள்ளன. இது மதுபானம் பரவலாகக் கிடைக்கும் நிலைமையை ஏற்படுத்தும். இதன் விளைவாக, மதுபானம் பாவனை அதிகரிப்பதுடன், பொதுச் சுகாதாரம் மற்றும் நாட்டின் பொருளாதாரம் மீதான ஒட்டுமொத்த பாதிப்பு பற்றிய கேள்விகளை எழுப்புகிறது. மேலும் மதுபான பாவனை அதிகரித்து நாட்டிற்கும், பொது மக்களுக்கும் சுகாதார மற்றும் பொருளாதார சுமையை அதிகரிக்கும்.

### மென் மதுபானம் உரிமங்களுக்கான கொள்கையின் அறிமுகம்:

மென் மதுபான வகைகளை ஊக்குவிப்பது மற்றொரு தொழில்துறைக்குச் சாதகமான உத்தியாகும், ஏனெனில் தயாரிப்பு அதிகரிப்புக்களுக்குப் பங்களிக்கிறது, இறுதியில் மதுபானம் நுகர்வே அதிகரிக்கும்.

சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவு மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தின் ஒத்துழைப்பு சர்வதேசத் தேவையுடன் மருத்துவ ஆலைகளுக்கு முதலீட்டாளர்களுக்கு உதவும் உள்நாட்டில் கஞ்சா தொழிலை உயர்த்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும், கஞ்சா பயன்பாட்டுடன் தொடர்புடைய சுகாதாரக் கருத்தாய்வுகளுக்கு அப்பால், உலக அளவில், கஞ்சா தொழில் குறைந்த நிதி வருமானத்துடன் சரிவைச் சந்தித்து வருகிறது என்பதை வலியுறுத்துவது முக்கியமானது. இதன் விளைவாக, நாட்டிற்குள் கஞ்சாவை ஊக்குவிப்பது குறிப்பிடத்தக்க பொருளாதார நன்மைகளை அளிக்காது.

தற்போதைய பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கான பரிந்துரையில், சர்வதேச நாணய நிதியம் (IMF) அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கான ஒரு சிறந்த முயற்சியாக மதுபானம் வரியை அதிகரிப்பதை முன்மொழிந்துள்ளது. ஆயினும்கூட, பாதீட்டு வாசிப்புகளில் மதுபானம் மற்றும் கஞ்சா தொழில்களுக்குச் சாதகமான கூறுகள் உள்ளன, ஐஆகு பரிந்துரைத்த பின்வரும் முயற்சிகள் முழுமையாகப் பரிசீலிக்கப்படவில்லை என்பதை நாங்கள் இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

மதுபானம், புகையிலை பொருட்கள் மீதான கலால் வரியை 20 சதவீதமாக அதிகரிக்கவும் புகையிலை பொருட்களுக்கான முதலாம் கட்ட வரி அதிகரிப்பு 2023 ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்டது. இதன் இரண்டாம் கட்ட வரி அதிகரிப்பு 2024 ஜனவரி இறுதிக்குள் செயல்படுத்தப்பட வேண்டும்.

### தானியங்கு குறியீட்டை அறிமுகப்படுத்துங்கள்:

கலால் வரிவிதிப்புக்கான நிலையான அணுகுமுறையைப் பேணுவதற்கான முக்கியமான நடவடிக்கை. இந்தப் பரிந்துரைகளிற்கேற்ப, தற்போதைய பாதீடு முன்மொழிவுகளை மறுபரிசீலனை செய்து, பரிந்துரைக்கப்பட்ட சட்டப்பூர்வமான மதுபானம் வரி அதிகரிப்பை டைமுறைப்படுத்துவதன் மூலம் அரசாங்க வருவாயை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த அணுகுமுறை IMF மற்றும் WHO ஆகிய இரு அமைப்புக்களின் பரிந்துரைகளுக்கு ஏற்றாற் போல் அமைந்துள்ளது, மற்றும் நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. மதுபானம் மற்றும்

- போதைப்பொருள் தகவல் நிலையம்



# கொமர்ஷல் வங்கியின் மர நடுகைத் திட்டம் ஆரம்பம்






ஒன்று வருட காலத்தில் நாடு முழுவதும் 100,000 மரங்களை நடும் தேசிய எதிர்ப்பார்ப்பு மிக்க திட்டத்தை கொமர்ஷல் வங்கி ஆரம்பித்துள்ளது. ஐக்கிய நாடுகள் பாரிஸ் உடன்படிக்கையின் பிரகாரம் நாட்டின் சுய வரையறைக்குட்பட்ட தேசிய காலநிலை உறுதிமொழிகளை நிறைவேற்ற உதவும் வகையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'மரங்கள் நிறைந்த தேசம்' என பொருத்தமாகப் பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. 12 மாவட்டங்களில் 17 இடங்களில் 12,000 மரங்களை நாட்டி வைத்து இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் படி ஆரம்ப தினத்திலேயே இந்தத் திட்டத்தின் சுமார் 12% நிறைவேறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் திட்டத்தின் ஆரம்ப தின நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் பங்கேற்றனர்.

சிங்கராஜ வனத்தில் கிருருவ, ஹந்தானை மலைப்பிரதேசத்தின் கீழ் புற சரிவு, அனுராதபுரத்தின் ஜய ஸ்ரீ மகா போதி வளாகம், பெல்லன்வில அத்திடிய பறவைகள் சரணாலயம், திஸ்ஸமஹாராம குளக்கரை பகுதி, நுவர எலிய விக்டோரியா பூங்கா, பல்கலைக்கழகங்கள் பலவற்றின் மைதானங்கள் என்பனவற்றில் முதல் கட்ட மர நடுகைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இந்தத் திட்டம் தொடர்ந்து அமுல் செய்யப்படும் என வங்கி அறிவித்துள்ளது. அரச முகவராண்மைகள், பல்கலைக்கழகங்கள், இலங்கை இராணுவம், வன பாதுகாப்பு திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஆதரவும் பெற்றுக் கொள்ளப்படும். மரங்கள் சுய வளர்ச்சி நிலையை அடையும் வரை அவற்றுக்குத் தேவையான பாதுகாப்பையும் பராமரிப்பையும் வங்கி வழங்கும்.

தேசிய மட்டத்தில் நிலைபெறுதகு தன்மையை ஊக்குவிக்கும் இந்தத் திட்டத்துக்கான அர்ப்பணம் பற்றி கருத்து வெளியிட்ட வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க "நாட்டின் முதலாவது காபன் சமநிலை வங்கி என்ற நிலையை அடைந்துள்ளதன் மூலம் நிலைபெறுதகு தன்மை என்பது கொமர்ஷல் வங்கியைப் பொருத்தமட்டில் வெறுமனே பேச்சளவில் உள்ள ஒரு விடயம் அல்ல என்பதை நாம் ஏற்கனவே நிரூபித்துள்ளோம். ஆனால் அது எங்களுக்கு ஒரு ஆரம்பம் மட்டுமே. முடிவல்ல. சுற்றுச் சூழல் புத்துணர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையிலும்; காலநிலை தாக்கங்களை எதிர்த்துப் போராடும் வகையிலும், வங்கி பல திட்டங்களுக்கு நிதி உதவிகளை வழங்கியுள்ளது. 'மரங்கள் நிறைந்த தேசம்' என்ற தொனிப்பொருளில் இந்தப் பெரிய அளவிலான திட்டத்தின் மூலம் வாயு தரத்தின் முன்னேற்றம், மழை வீழ்ச்சி, உயிர் பன்முக தன்மை என்பனவற்றில் கணிசமான தாக்கங்கள் ஏற்படும் என்பது எமது நம்பிக்கையாகும். இந்த திட்டமானது நிலையாண்மை தொடர்பில் வங்கியின் சுற்றாடல் இலக்குகளை அடைந்து கொள்வதை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல. மாறாக இது ஒரு பொறுப்பான கூட்டாண்மை பிரஜை என்ற வகையில் வங்கி, இந்த நாடு தனது காலநிலை இலக்குகளை அடைந்து கொள்வதில் மேற்கொண்டுள்ள ஒரு நடவடிக்கையாகும்" என்றார்.

கொமர்ஷல் வங்கி ஆதரவளித்துள்ள இது போன்ற சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்களில் பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள திம்புலாகல கந்தேகம வன பிரதேசத்தில் தரம் குறைந்துள்ள 100 ஹெக்டயர் வனவாழ்வு பிரதேசத்தில் மீள காடு வளர்ப்புத் திட்டம், கொக்கலையில் கண்டல் தாவர மீன் வளர்ச்சித் திட்டம், பாணமையில் கடல்சார் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம், களுத்துறை கரையோர பகுதியை மெருகூட்டி பராமரிக்கும் திட்டத்தில் இலங்கை பல்லுயிர் நிலையத்துடன் பங்குடைமை, பல்வேறு கரையோர சுத்திகரிப்புத் திட்டங்கள் என்பன அடங்கும்.

Microsoft Imagine Cup 2024ஆம் ஆண்டுக்காக

# இலங்கையில் அறிமுகம்




தூர நோக்குடைய மாணவர் தொழில் முயற்சியாளர்களுக்கு Microsoft AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புத்தாக்கமான தீர்வுகளை வழங்கக்கூடிய சர்வதேச ரீதியிலான தொழில்நுட்பத் திறன் காண் போட்டியான Microsoft Imagine Cup, 2024ஆம் ஆண்டுக்காக இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Microsoft Imagine Cup தற்போது 22ஆவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்படுகின்றது. தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தொழில்நுட்ப ரீதியான தீர்வுகளைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் இந்தப் போட்டி அமைந்துள்ளதுடன், இந்த ஆண்டு AI இல் புதுப்பிக்கப்பட்ட நோக்கத்தைக் கொண்டிருக்கும். இந்தப் போட்டியில் பங்கேற்பதனூடாக மாணவர்களுக்கு, USD 1,000 Azure Credits மற்றும் USD 2,500 OpenAI Credits ஆகியவற்றுடன், நிபுணர்களின் வழிகாட்டல்களைப் பெற்று நவீன AI தொழில்நுட்பத்தை அணுகும் வாய்ப்பு கிடைப்பதுடன், தமது AI பயணத்தைத் துரிதப்படுத்திக் கொள்ள முடியும். நிபுணத்துவ தொழில்நுட்ப மற்றும் தொழில்முயற்சியாண்மை ஆலோசனை வழங்கலுடன், USD 100,000 தொகையை வெல்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும். மேலும் Microsoft தவிசாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சத்யா நதெல்லாவுடன் ஆலோசனை வழிகாட்டல் அமர்வில் பங்கேற்கவும் முடியும்.

சுமார் இரு தசாப்த காலப்பகுதிக்கு முன்னர் இந்தப் போட்டித் தொடர் ஆரம்பமானதுடன், இலங்கையின் மாணவர்களுக்கும் உலகளாவிய போட்டியின் இறுதிச் சுற்றுக்கும், ஆசியாவின் வெற்றியாளர்களாகவும் தெரிவாகியிருந்தனர். இந்த ஆண்டு, தகைமை சுற்றில் தெரிவானதன் பின்னர், அடுத்த கட்டத்துக்கு முன்னேறுவார்கள்.

Imagine Cup பங்குபற்றுநர்கள் எனும் வகையில், மாணவர்களுக்கு விறுவிறுப்பான Founders Hub ஐ அணுகும் வாய்ப்பு வழங்கப்படும். அதனூடாக அனைவருக்கும் தொழில் முயற்சியாளராகத் தெரிவாகி, தமது சமூகங்களுக்கு மீளளிப்பதற்கு வாய்ப்பை வழங்கும். Azure, including OpenAI GPT-3.5 Turbo மற்றும் GPT-4, Meta இடமிருந்து Llama 2 மற்றும் பல முன்னணி AI மாதிரிகளை அணுகி ஆதரவைப் பெற முடியும்.

இந்தப் போட்டி தொடர்பாக Microsoft ஸ்ரீலங்கா மற்றும் மாலைதீவுகள் முகாமையாளர் ஹர்ஷ ரந்தெனி கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் Microsoft Imagine Cup ஐ அறிமுகம் செய்வதையிட்டு பெருமை கொள்கின்றோம். மாணவ தொழில் முயற்சியாளர்களுக்கு பாரியளவில் சிந்தித்து, வாய்ப்புகளைக் கண்டறிந்து, புத்தாக்கமான சிந்தனைகளினூடாக, உலகின் மாபெரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவிகளை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பை உறுதி செய்துள்ளோம். இம்முறை போட்டியின் போது AI இல் அதிகளவு கவனம் செலுத்தப்படுவதுடன், மாணவர்களின் தீர்வுகள் கண்டிப்பாக Microsoft Azure உள்ளடக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். நாட்டின் டிஜிட்டல் மாற்றியமைப்பு மற்றும் AI பயணத்துடன் இணைந்துள்ள இந்தப் போட்டியினூடாக, அடுத்த தலைமுறை தொழில் முயற்சியாளர்களுக்கு சமூகத்துக்குப் பங்களிப்பு வழங்குவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த போட்டியில் வெளிப்படுத்தப்படும் புத்தாக்கம் மற்றும் ஆக்கத்திறனை நான் பெருமளவில் எதிர்பார்ப்பதுடன், தமது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தக் கிடைத்துள்ள வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவும், உலக சம்பியன்ஷிப்பை எய்துவதற்கான சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாணவர்களை நான் ஊக்குவிக்கின்றேன்." என்றார்.

இலங்கையின் மாணவர்களுக்குச் சர்வதேச மட்டத்தில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை Microsoft Imagine Cup 2024 வழங்குவதுடன், உள்நாட்டில் நடைபெறும் போட்டியில் கௌரவிப்பைப் பெறுவதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கும். நான்கு கட்டங்களைக் கொண்டுள்ள இந்தப் போட்டியின் தகைமை சுற்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது (ஜனவரி 24 நிறைவடையவுள்ளது). Minimal Viable Product (MVP) சமர்ப்பிப்புகள் சுற்று (ஜனவரி 26, பெப்ரவரி 9), அரையிறுதி (பெப்ரவரி 23, ஏப்ரல் 12) மற்றும் இறுதிப் போட்டி 2024 ஏப்ரல் மாதம் 26 நடைபெறும்.

காஷ்மீர்



# “ ஊடுருவ காத்திருக்கும் 300 பயங்கரவாதிகள்”

தெற்கு காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் எல்லைப் பாதுகாப்புப் படையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அசோக் யாதவ் சனிக்கிழமை (16) செய்தியாளர்களைச் சந்தித்துள்ளார். அப்போது அவர் கூறியதாவது,

“எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள ஏவுதளங்களில் சுமார் 250 முதல் 300 பயங்கரவாதிகள் ஊடுருவ காத்திருப்பதாக உளவுத்துறைக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. நாங்களும் இராணுவமும் பாதிக்கப்படக்கூடிய அனைத்துப் பகுதிகளிலும் ஆதிக்கம் செலுத்தி எச்சரிக்கையாக இருக்கிறோம்.

எல்லையில் பாதுகாப்புப் படையினர் விழிப்புடன் உள்ளனர். கண்காணிப்பு பணிகள் அங்கு தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. எந்த ஊடுருவல் முயற்சியையும் முறியடிக்க உறுதியாக இருக்கிறோம்” என தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசம்

# “அயோத்திக்கு வராதீர்கள்”

உத்தரப் பிரதேசம் மாநிலம், அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோயில் ஜனவரி 22ஆம் திகதி பிரமாண்டமாக திறக்கப்படவுள்ளது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ள உள்ளார். மேலம், இலட்சக்கணக்கான பக்தர்கள் அயோத்திக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் இதுகுறித்து, ராம் மந்திர் அறக்கட்டளையின் செயலர் சம்பத் ராய் கூறியதாவது,

“ஜனவரி 22ஆம் திகதி விழா நடைபெறுகிறது. கருவறை, சிலை தயாராக உள்ளது. ஆனால், கோயிலில் நிறைய வேலைகள் உள்ளன. இன்னும் 2 ஆண்டுகளுக்கு கட்டுமானப் பணிகள் தொடரலாம். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அயோத்தி திறப்புக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளனர். நகரத்தில் நெரிசலைத் தவிர்க்க, ஜனவரி 22ஆம் திகதி அயோத்திக்கு வர வேண்டாம். அருகில் உள்ள கோயிலில் ஒன்று கூடுங்கள்” என தெரிவித்துள்ளார்.

# உலகின் மிகப்பெரிய வர்த்தக மையம்

குஜராத்



இந்தியாவின் வைரத் தொழில் தலைநகரமாக குஜராத்தின் சூரத் நகரம் காணப்படுகின்றது. உலகின் 90 சதவீத வைரங்கள் இங்கு பட்டை தீட்டப்படுவதாக கூறப்படுகிறது. வைரத்தை வெட்டுதல், பட்டை தீட்டுதல் மற்றும் வியாபாரத்தில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைத்து செயல்படும் விதமாக, ‘சூரத் வைர பங்குச்சந்தை’ என்ற மகா பெரிய அலுவலகம் கட்டப்பட்டுள்ளது.

சூரத் வைர நகரில் 35 ஏக்கர் நிலப்பரப்பில், 15 மாடிகளைக் கொண்ட 9 செவ்வக வடிவ அமைப்புகளாக இந்தக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இந்த அலுவலக கட்டிட வளாகத்தின் மொத்த தள பரப்பளவு 70 இலட்சத்து 10 ஆயிரம் சதுர அடி ஆகும்.

டெல்லியைச் சேர்ந்த கட்டிடக் கலை நிறுவனமான மார்போஜெனிசிஸ் சுமார் 4 ஆண்டுகளில் இந்தக் கட்டிடத்தைக் கட்டி முடித்துள்ளது. இதற்கான மொத்த செலவு ரூ.3 ஆயிரம் கோடி ஆகும்.

உலகிலேயே மிகப்பெரிய அலுவலக கட்டிடமாக இருந்த பென்டகனை, சூரத் வைர வர்த்தக மைய கட்டிடம் முந்தியுள்ளது.


இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (17) சூரத் வைர பங்குச்சந்தை அலுவலக கட்டிடத்தைப் பிரதமர் மோடி திறந்து வைத்துள்ளார்.

ரஷ்யா

# மன்னிப்பு கேட்டார் புட்டின்

ரஷ்ய ஜனாதிபதி புட்டின் வருடத்தின் இறுதியில் ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடம் நேரடியாக உரையாடும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிப்பார்.

அப்போது ஓய்வூதியம் வாங்கும் முதியவர் ஒருவர் முட்டை விலை, கோழி இறைச்சி விலை ரொக்கெட் வேகத்தில் உயர்ந்துள்ளதாக தனது வேதனையை புட்டினிம் தெரிவித்தார்.



அதற்கு பதிலளித்த புட்டின் “இதற்காக நான் மன்னிப்பு கேட்கிறேன். ஆனால் இது அரசாங்க பணியின் தோல்வி. எதிர்காலத்தில் இந்த பிரச்சினை சரி செய்யப்பட்டு சூழ்நிலை சரியாகும் என நான் உறுதியளிக்கிறேன்” என்றார்.

ரஷ்யாவில் பணவீக்கம் மிகவும் மோசமாக இருந்து வருகிறது. இந்த ஆண்டு 8 சதவீதமாக உயர்ந்துள்ளது. உக்ரேன் மீது ரஷ்யா போர் ஆரம்பித்த பிறகு முட்டையின் விலை சுமார் 40 சதவீதம் உயர்ந்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகள் பல்வேறு தடைகள் விதித்துள்ளதால் முட்டை உற்பத்தியாளர்கள் கோழி தீவனம் போன்றவற்றை இறக்குமதி செய்ய முடியாத நிலை உள்ளது. இதனால் உள்நாட்டு உற்பத்தி மிகப்பெரிய அளவில் குறைந்துள்ளதாக தெரிகிறது. மேலும், இறக்குமதி வரியை உயர்த்தியதும் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா

# வசூலில் உலக சாதனை

அமெரிக்காவை சேர்ந்த 34 வயதான பிரபல பாடகி, டெய்லர் ஸ்விஃப்ட் (Taylor Swift), வசூலில் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

டெய்லர், 2024 டிசெம்பர் வரை உலகம் முழுவதும் பல நாடுகளில் இசை நிகழ்ச்சிகள் நடத்தும் வகையில் ஒரு நீண்ட இசை சுற்றுலாவை 2023 மார்ச் மாதம் ஆரம்பித்தார். எராஸ் டூர் (Eras Tour) என பெயரிட்டுள்ள இந்த சுற்று பயணத்தில், தனது வாழ்நாளில் இதுவரை அவர் கடந்து வந்த இசை பயணத்தின் வெவ்வேறு காலகட்டத்தை நினைவுகூரும் விதமாக 44 பாடல்கள் கொண்ட 10 பகுதிகளாக பிரித்து நிகழ்ச்சியை நடத்தி வருகிறார்.

ஸ்விஃப்டீஸ் (swifties) என அழைக்கப்படும் அவரது தீவிர ரசிகர்கள் அவர் செல்லும் நாடுகளுக்கெல்லாம் இடைவிடாது சென்று நிகழ்ச்சியை ரசிக்கின்றனர்.

ஒவ்வொரு இசை நிகழ்ச்சியையும் சுமார் 72 ஆயிரம் பேர் பார்க்க வருகின்றனர். கட்டணம் சுமார் ரூ.19 ஆயிரத்திற்கும் ($238) மேல் நிர்ணயிக்கப்பட்டும் ரசிகர்கள் தயங்காமல் காண வருவதால் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ரூ.141 கோடிகளுக்கும் (17$ மில்லியன்) மேல் வசூல் குவிகிறது.

கடந்த ஜூலை மாதம், அமெரிக்க மத்திய ரிசர்வ் வங்கி சார்பில் ஒவ்வொரு வருடமும் 8 முறை வெளியிடப்படும் பீஜ் புக் (Beige Book) எனப்படும் “சமகால பொருளாதார சூழல்” குறித்த அறிக்கையில் கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு பிறகு ஓட்டல் அறைகளின் முன்பதிவு “எராஸ் டூர்” நிகழ்ச்சியால் பன்மடங்கு அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.



அமெரிக்காவின் புகழ் பெற்ற “டைம்” (Time) பத்திரிகை, “2023 ஆண்டிற்கான நபர்” என டெய்லரை தெரிவு செய்து தனது அட்டைப்படத்தில் வெளியிட்டது.

டெய்லர், இதுவரை வசூலிலும், நிகழ்ச்சிகள் நடத்துவதிலும் 117 கின்னஸ் சாதனைகளை புரிந்துள்ளார்.

இந்நிலையில், அவரது “எராஸ் டூர்” இசை நிகழ்ச்சி ரூ.8,333 கோடிக்கு ($1 பில்லியன்) மேல் வசூல் செய்து புதிய உலக சாதனையை படைத்திருக்கிறது.

சர்வதேச மாஸ்டர் மெய்வல்லுநர் திறந்த போட்டி

# ஹிமாயூன், துபைல் பிரகாசித்தனர்



■ எம்.யூ.எம். சனூன்

சர்வதேச மாஸ்டர் மெய்வல்லுநர் திறந்த போட்களானவை மாத்தறை கொட்டவில மைதானத்தில் சனிக்கிழமை (16) நடைபெற்றது.

இதில், புத்தளத்தைச் சேர்ந்த உடற்கல்வி போதனாசிரியர்களான எம்.எப்.எம்.ஹுமாயூன் உயரம் பாய்தல் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், எம்.எப்.எம்.துபைல் நீளம் பாய்தல் போட்டியில் தங்கப் பதக்கத்தையும் மற்றும் 100 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.



# டயமண்ட் இல்லம் சம்பியன்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான சிறுவர் விளையாட்டுப் போட்டியானது பேருவளை பேர்கோ புட்சால் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றிருந்த நிலையில், அதில் டயமன்ட் இல்லம் சம்பியனானது.



வடக்கின் நீலங்கள் சமரில்

# கிளிநொச்சி மத்திய கல்லூரி வென்றது

■ அஸ்ஹர் இப்றாஹீம்

வடக்கின் நீலங்களின் சமர் என்றழைக்கப்படும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரிகளுக்கிடையிலான 12ஆவது மோதலில் மத்திய கல்லூரி வென்றது.

தமது மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரி தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 82 ஓட்டங்களையே பெற்றது. அந்தவகையில் பொலோ ஒன் முறையில் தொடர்ந்து தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 87 ஓட்டங்களையே பெற்று இனிங்ஸ் மற்றும் 83 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதுவரை நடந்த 12 போட்டிகளில் இந்துக் கல்லூரி அணி 4 போட்டிகளில் வெற்றி பெற்றிருப்பதுடன், மத்திய கல்லூரி மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கிறது. ஐந்து போட்டிகள் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்திருக்கிறது.

முல்லையில் இரண்டு பாடசாலைகளுக்கு

# வலைப் பயிற்சித் திடல்கள்

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளுக்கு வலைப் பயிற்சி திடல்கள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைக் கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இலங்கை கிரிக்கெட் சபையால் மூன்று மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு வலைப் பயிற்சித் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மல்லாவி மத்திய கல்லூரி, வெலிஓயா அத்த வட்டுனவா மகா வித்தியாலயத்துக்கே இவ்வாறு வலைப்பயிற்சித் திடல்கள் அமைக்கப்பட்டுளளன.



# பூப்பந்தாட்டத் தொடர் ஆரம்பம்

■ எம்.எஸ்.எம். நூர்தீன்




கிழக்கு மாகாண மட்ட பூப்பந்தாட்டத் தொடரானது மாகாண பூப்பந்தாட்ட சங்கம் அல்ரா நிறுவனத்துடன் இணைந்து காத்தான்குடி அல்ரா பூப்பந்தாட்ட உள்ளக அரங்கில் எதிர்வரும் ஞாயிறு (24), திங்கட் (25) கிழமைகளில் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக பிரதேச ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று, அல்ரா குழுமம் நிறுவனத்தின் அலுவலகத்தில் சனிக்கிழமை (16) நடைபெற்றது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த கிழக்கு மாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் அலியார் பைசர், “மட்டக்களப்பு மாவட்டத்திலும் காத்தான்குடியிலும் பூப்பந்தாட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், மாகாண மட்ட, தேசிய மட்ட, சர்வதேச மட்ட பூப்பந்தாட்டப் போட்டிகளுக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து சிறந்த பூப்பந்தாட்ட வீரர்களை உருவாக்கும் நோக்கத்தோடும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் இதன் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் வகையிலும் இந்த பூப்பந்தாட்டத் தொடரை முதற் தடவையாக மட்டக்களப்பு காத்தான்குடியில் நடாத்துகிறோம்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாகி திங்கட்கிழமை மாலையுடன் நிறைவு பெறவுள்ளது. இதில் கிழக்கு மாகாணத்திலுள்ள 62 பூப்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களிலிருந்து 200க்கு மேற்பட்ட போட்டியாளர் பங்குபற்றவுள்ளனர். இதன்மூலம் சமூக ஒற்றுமையும் இனங்களுக்கிடையிலான பரஸ்பரம் புரிந்துணர்வும், நல்லிணக்கமும் ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கை உண்டு. இதில், தமிழ். சிங்கள, முஸ்லிம் வீரர்கள் அதே போன்று வீராங்கனைகளும் பங்குபெறவுள்ளனர்” எனத் தெரிவித்தார்.

விஜய நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 18 டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.